




ஓலை 184| ஓசை 307| ஜூலை 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## அறிஞர் அண்ணாதுரை

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை**
**அதிர வருவதோர் நோய்**

## பொருள்

**பின்னர் வரப்போவதை முன்னதாகவே அறிந்து காக்கும் அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வருவதான ஒரு துன்பமும் இல்லை.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## விடையில்லா வினா (எண்சீர் மண்டிலம்)




தொன்மைநிறைந்த செம்மொழியாம் தமிழை யின்று,
தொலைத்தவர்யார்? உலகமாண்ட தமிழ ரின்று
இன்றெங்கும் ஏதிலியாய் மாற்றி னர்யார்?
எந்தெந்த நாடுகளோ விடுத லையால்
குன்றெனவே நிமிர்ந்துநிற்க தமிழீ ழத்தைக்
குழித்தோண்டிப் புதைத்ததுயார்? தகுதி யற்றப்
பின்வந்த மொழியெல்லாம் ஆட்சி யாள
பைந்தமிழைப் புறக்கணித்த பேடி யர்யார்?

கல்வியிலே, கோவிலிலே, மற்ற மற்றக்
கணக்கற்றத் துறைதோறும் தமிழை நீக்கிப்
பொல்லாத பிறமொழியைத் திணித்த வர்யார்?
பாடுபட்டும் பஞ்சைகளாய் ஏழை தம்மை
தொல்லையிலே தொழுவமாடாய் விட்ட வர்யார்?
செல்வராக ஒருசிலரை வசதி யாக
வல்லவராய் வாழ்வதற்கு விட்ட வர்யார் ?
வினாயிவைக்கு விடைகாண்போர் யார்யார்? கேட்போம்!




நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

## பாவகை : எட்டடி பஃறொடைவெண்பா

எண்ணத்தைச் சொல்லிட
ஏறினான் குன்றினில்.
பண்ணிசை கேட்டான்
பரந்த உலகினில்
கண்ணசைவில் சைகையைக்
கண்டே மொழியாக்கல்.
சுண்ணத்தைப் பாவிச்
சுதைசிற்பம் நாட்டினான்
மண்ணில் உழுதான்
மகிழ்ந்தே உணவீந்தான்
விண்ணிலே சுற்றிடும்
விந்தைகோளைக் கண்டிட்டான்.
தண்ணீரைத் தேக்கத்
தடுப்பணைக் கட்டினான்
கண்டார் வியந்திடக் காண்.



கவிஞர் செ. கலைவாணி

# வேளாண்மை

பாவகை : குறள் வெண்பா

1) பதைக்கும் வயிறைப் பதமாய் அமர்த்தும்
விதையால் உயர்ந்த வெளி

2) நதியின் தடங்களில் நன்னீர்ப் பெருகின்
சதியிலா வேளாண் சதம்

3) வருணன் கருக்கொளல் வஞ்சனை யாகின்
கருவறைக் காயும் கதிர்

4) கதிரோன் ஒளியுடன் காலைப் பனியும்
கதிரின் செழுமைக் கரண்

5) உழவன் விரல்களுக் கொப்பாம் வகுத்தோன்
தொழுதின் அவனைத் தகும்

6) முப்போகம் பால்பிடித்து முற்றும் முறையாகச்
செப்பனிட்டுக் காய்ச்சிய சேறு

7) நிறைமனமில் மாந்தர் நிறைவயின் ஆற்றி
நிரைத்து விடுமாம் நிலம்

8) உழுபடைக் கூர்மை உழவனுக் காற்றல்
உகமகள் மென்மையின் உட்கு

(உழுபடை -கலப்பை , உகமகள் -நிலமகள்,
உட்கு -அச்சம் நாணம் மிடுக்கு மதிப்பு )

9) மகரநீர் மாசுநீக்கி மஞ்சனம் செய்தல்
மகிபனின் வேளாண் மதி

மகரநீர் -கடல்நீர் , மஞ்சனம்- நீரோட்டம்,
மகிபன் -ஆட்சிசெய்பவன்

10) வியர்வை நிலத்தில் விரவ வழியின்றேல்
வித்தகர்க்கும் இல்லை விருந்து

11) சுழன்றடிக்க காற்றோடு சுற்றும் பதர்கள்
விழலாக முற்றிய வித்து



கவிஞர் ஐமுனா ஜெகன், நாகர்கோவில்

# என் பாதை என் பயணம்

கற்களும் கற்பாறைகளும்
நிறைந்த பாதை - என் பாதை
கல்லிடறிவிட்டால்
கற்பாறை சறுக்கிவிட்டால்
இரத்தத்தைப் புவிக்குத்
தர வேண்டிய சூழலுமுண்டு

முட்களும் முட்புதர்களும்
நிறைந்த பாதை - என் பாதை
முட்கள் கீறிவிட்டால்
முட்புதரில் சிக்கிவிட்டால்
அதுவே கல்லறையாக
மாறும் சூழலுமுண்டு

என் பாதையின் கடினம்
என் பயணமும் கடினமாகும்
என் பயணத்தில்
ஒவ்வொரு நிறுத்தமும் உண்டு
ஒவ்வொரு நிறுத்தத்தில்
ஒவ்வொரு அனுபவம்
அனுபவங்களைக் கடந்தும்
பக்குவப்படாத மனதோடு
என் பயணம் தொடர்கிறது



என் பயணத்தின் முடிவு
எப்போது தெரியாது
என் மனம்
பக்குவ நிலைக்கு
வரும் வேளை
எனக்கான பாதை
மலர்ப்பாதையாக மாறலாம்

கடினங்கள் மறைந்து
பேரின்பப் பெருவாழ்வு கிடைக்கலாம்
அந்தக் கணம்தான்
என் பாதையின் முடிவு
என் பயணத்தின் முடிவு
என் வாழ்வின் முடிவும் கூட.


அகத்தினை ஆளும்
அகத்தீசனே அதற்கான
வழிகாட்டும் குரு
என் பாதை என் பயணம்
முடிவு செய்வது
அகத்தீசன் மட்டுமே

என் பாதை என் பயணத்தில்
இருக்கும் உங்கள்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# நிகழ்காலம்

இருக்கின்ற காலத்தை
இறந்தகாலம் தீர்மானிக்கிறதா?
எதிர்காலத்தை தீர்மானிப்பதும்
இருக்கின்ற காலமென்றிருக்கிறாயா?
ஆக நினைத்ததும்
இருக்க விழைந்ததும்
இறந்தகாலத்தில் செத்துமடிய
இருக்கின்ற காலத்தில்
எதிர்காலப் பதிவேட்டில்
என்ன எழுதப் போகிறாய்?
இருக்கின்ற காலத்தில்
இறந்த காலத்தின் நிகழ்வுகளை
அர்த்தமற்று எண்ணிப்பார்ப்பதை
நிறுத்து.
எதிர்காலக் கனவை
இருக்கும் நிகழ்காலத்திலேயே தொலை
தொலைத்து விடு.
உன்னிலிருந்து அனுபவங்களைப் பிரி.
ஆக நினைத்ததையும்
இருக்க விழைந்ததையும்
பொய்க்கனவென்று அறி அழி.
எல்லாமும் அதுவதன் விருப்பப்படியே
நடக்கும் ஓடும் அமரும் படுக்கும்.
இருப்பதைக் கொண்டு இன்புற்றிருக்க
இருக்கும் காலம் போதும்.
என் இறந்த காலத்தில் எழுதப்பட்டதில்லை
இக்கவிதை.
என் எதிர்காலத்தில் எழுதப்போவதில்லை
இக்கவிதையை.
இதை நீ படிக்கும் காலமும்
இதை நான் எழுதிய காலமும் ஒன்றே.
அது எப்போதும்
இருக்கின்ற நிகழ்காலம்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# நீதி வெல்லும்



நீதி அழிந்து
அநீதி தலையெடுக்கும் வேளை,
அவனியில் அழுகுரல் அலைந்து நிற்கும்!
அண்டசராசரங்கள் நடுநடுங்க
அங்கே நீதி பிறக்கும்!

உலகமே அநீதியின் போர்வையால் மூடிட,
காரிருளுக்குள் அகப்பட்டு
ஒளியின் திசை தேட,
நீதியின் தேவதை தோன்றிடுவாள்!

நீதியின் குழந்தையாய் உண்மை ஜனனம்!
எத்தனை வேதனைகள் அந்த நீதித் தாய்க்கு!
பிறக்கும் போதே வாய்மையையும் நேர்மையையும் அணிந்து,
நீதியைக் காத்திடும் பொறுப்பை ஏற்றிட வேண்டும்!

அநீதி வெற்றி வாகையை மாயைக்குள் சூடியது,
அகிலமே கண்ணீர் வடித்தது!
நீதியின் கோஷம் குரல் எழுப்பியது,
நம்பிக்கையில் நீதி துளிர்க்கும் என்று இயற்கையும் சொல்லியது!

ஆத்திகனின் நம்பிக்கை நேர்மையாளரைக் காத்திடும்!
காலங்கள் கடந்தாலும்
அந்தக் காத்திருப்பு பொய்ப்பதில்லை!
நீதியின்படி நடப்பவருக்கு வெற்றிப் கனி வழங்கிட!

நீதியே வெல்லும்!
நியாயத்தின் அருகே அநியாயம் சென்றிட அஞ்சும்!
அநியாயம் சாம்பலாகிப் புதிய உலகம் படைக்கத் துடிக்கும்!
கலியுகப் புதிய ஆர்ப்பரிப்பில் நீதியே வெற்றியளிக்கும்!

கவிஞர் ஜீவனிநா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# வாழ்நாள் முழுமையும் உன்னோடு இன்பமே

தளிருடல் மேனியது
தகதகத்துச் சொலிக்கிறதே

பின்னல் நடைதனில்
பித்தனானேன் கண்ணே

சிற்றிடை அசைவினில்
சிதறுண்டேன் நானே

புன்னகைப் பூத்திட
பூவாய் மலர்ந்தவளே

இதயத்துத் தாமரையே
இந்திரலோக ஊர்வசியே

இதழமுதம் பருகிடவே
இளமையும் நினைக்குதே

பருவத்தின் எழிலே
பரிதவிக்கச் செய்கின்றாயே

உள்ளமும் உடலும்
உணர்வால் உறவானதே

மயக்கும் விழியழகில்
மறந்தேன் என்னையே

உயிரோசையின் சப்தமதில்
உன்மத்தம் ஆனேனே



நளினத்தில் நாட்டியமாடும்
நங்கையின் தேகமே

ஆவலது பெருகுகின்றதே
ஆரணங்கைத் தழுவிடவே

வாழ்நாள் முழுமையும்
உன்னோடு இன்பமே

கணநேரமும் பிரிந்திடேன்
கனிந்திட்ட காதலாலே

ஒன்றாய் இணைந்திட்ட
அன்பின் அமுதமே

வாழ்வும் ஒளிர்ந்திட
வஞ்சியே வந்துவிடு.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

முறை மாற்றி முருகனைப் பற்றிட
முரண் எழுப்பும் வஞ்சகப் படை
பனி நிறைத்த குன்றைச் சுட்டி
பழையனைக் கவரும் வடவன்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# அடிமை நெறியே ஆகச்சிறந்த நெறி!

தமிழ்ப்பாட்டி ஔவை தமிழ்க்கடவுளிடம் அளவளாவிய வேளை,
தகப்பன் சுவாமி "பெரிது எது?" எனக் கேட்க, ஔவையும்:
தட்சனை எரித்த தகைசால் இறைவனும் அடங்கிடும் உள்ளம் கொண்டு,
தந்தையாய், தாயாய், குருவாய், தோழனாய் இறையை
நினைத்து வணங்கித் தொண்டாற்றி வாழும்,
நமனைக் கண்டும் அஞ்சாத் தூய அடியார் பெருமையே பெரிதென்றாரே!


அத்தகைய அடியாரின் பெருமையைத் திருவெண்ணெய்நல்லூரில்
அவதரித்துப், "பித்தன்" என்று பிறவாப் பெம்மானை அழைத்தே,
அவனிடத்து வாய்ச்சண்டை செய்து வம்பிழுத்து,
அவனால் "தம்பிரான் தோழன்" என அழைக்கப்படும் பேறுபெற்ற
சுந்தரமூர்த்தி நாயனார், "அடியார்க்கும் அடியேனென"ச்
சுந்தரத் தமிழில் பாடித்தந்த திருத்தொண்டத்தொகை தன்னையெந்தன்
சிரசுமேல் வைத்துச் சிற்றம்பலவானனின் திருவடி போற்றுவனே!

திருக்கைலையில் சிவத்திற்குத் தொண்டாற்றும் ஒருநாளில்,
திருமேனி அழகுடைப் பெண்டீர் இருவரை நந்தவனத்தில் கண்டு
மதிமயங்க, இறை சாபமேற்று மண்ணுலகம் வந்து,
மங்கையர்களாம் பரவை, சங்கிலியார் என்போரைத் திருமணம் செய்து,
சங்கிலியாரிடம் சிவனைச் சாட்சியாய் வைத்துச் செய்த பொய்ச்
சத்தியத்தால் கண்பார்வையை இழந்து, தன் பத்தியால் அதை
மீட்ட கதை சொல்லச் சொல்ல நாவினிக்கும்! தன்னை
மீண்டும் பரவையாருடன் சேர்த்துவைக்க இறைவனையே
தூதனுப்பிய சுந்தரரின் பத்தியை நினைக்கக் கண்களிரண்டும்
தூய நன்னீர்க் குளமாகும்; அதனை எடுத்துரைக்க வாய் மணக்குமே!

சுந்தரர் வாழ்ந்த காலமதில் கலிக்காமர் என்ற அடியாருமுண்டு;
சுந்தரர் தன் மனைவியுடன் மீளச் சேர இறைவனைத்
தூதனுப்பியதால் தீராக் கோபம் கொண்டதை அறிந்து, அதை மாற்றிடத்
திருவிளையாடல் நாயகனை வேண்ட, அவரும் சூலைநோயைக்
கலிக்காமருக்குத் தந்து, அதைச் சுந்தரர் மட்டுமே தீர்ப்பார் என வழி
காட்டி, சுந்தரர் எத்தகையவர் என கலிக்காமருக்கு உணர்த்தி,
கண்ணுதலான் அவ் விருவருக்குமிடையே தோழமை தொடரச் செய்தான்!

திருத்தொண்டர் புராணம்:
(ஏயர்கோன் கலிக்காமர் புராணம்)

மற்றவர் வணங்கி வீழ வாளினை மாற்றி உயர்
கொற்றவ னாரும் நம்பி குரைகழல் பணிந்து
அற்றைநாள் நிகழ்ந்த இந்த அதிசயங் கண்டு வானோர்
பொற்ற மலரின் மாரி பொழிந்தனர் புவனம் போற்ற.



கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# மூடநம்பிக்கை

சாலையோரக் கற்களில்
சாமிகளைத் தேடும்
சராசரிகளின் கூட்டம் அதிகமாய்!

சாமியார்களின் மடியில்
ஆன்மீகம் தேடும்
பெண்மையோ வேதனையாய்!

மூடநம்பிக்கைகளை முதுகில்
சுமந்து, எலுமிச்சம்பழத்திடம்
வாழ்வைத் தேடும் சோகங்கள்!

கருப்புக் கயிற்றில் எதிர்காலத்தைத்
தேடும் ஆன்மீக அவலங்கள்
நெஞ்சில் கோபங்களாய்!

ஆலயத்தில் ஆண்டவன் அமைதியாய்
நிற்க, ஆன்மீகமோ பொதுவெளியில்
இரைச்சலாய்!

மதங்களின் போர்வைகள்
மனிதனின் புண்ணியத்தில்...
தெய்வங்களுக்குப் பொன்னாடைகளாய்!

"இது என்னுடைய கடவுள்!" - இந்தச்
செவி கிழிக்கும் சத்தத்தில்
இறைவனும் ஊமையாய்!




கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

பெண்ணாய்.
அழகாகவும் ஆனந்தமாகவும்
வளர்ந்து வருகிறாளே!
கள்ளம் கபடமறியாமல்
துன்பத்தையும் எதிர்கொள்ளாமல்,
வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கிறாளே!



ஆண்டுகள் சில கழித்து
வாழ்க்கையோ மாறுகிறதே!
துன்பமும் நேர்கிறதே!
செய்யும் செயல்களில் எல்லாம்
குற்றமே கண்டுபிடிக்கப்படுகையில்,
எதையும் பொருட்படுத்தாமல்
தன் அங்கீகாரத்தை அடைய
முயற்சியில் ஈடுபடுகிறாள்!

சொந்தக் காலில் நிற்க வேண்டுமென்றே,
கர்வத்தில் பேசுபவர்களை நினைத்துப் பாராமல்.
ஒரு சிறந்த பெண்ணாக,
போட்டிகள் நிறைந்த உலகில் திகழ்கிறாள் இவள்!

கவிஞர் மா. மோனிஷா

கோமகனும் மௌனம்
கோடிகள் கொண்டதுண்டோ?
வானிலை ஆராய்ச்சியில்
வானமுமான அமைதிகள்!

ஆள்வதும் தகுதியும்
ஆண்டுகொள்ளும்!
முன்னிலைப்படுத்தும்
முல்லை வீதிகளோ?

விரிக்கும் வலைக்குள்
விழாமலே சுழலுதே!?
பெருங்கூச்சல் அடங்கிய
பெருமைகளைத் தேடுமோ?



ஆண்டவரும் கொண்டாடும்
ஆசான் சொற்றொடர்களோ?
அன்பின் வெளிப்பாட்டில்
அலைகளாய்த் திரும்பிடுமே!

சுனைகளின் பேரொலியில்
சுந்தரத்தின் மோனங்களோ?
தேவதைகளின் இதழ்களில்
தேவகானங்களின் சங்கமமோ?

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# நித்தம் உன் நினைவே!

ஐயனே!
கடந்த வருடம் இதே நாளில் உன்னைத்
தரிசிக்க ஜோடியாய் வந்தோம்!



கடுமையான பயணத்திலும்
உன்னைக் காணும் வரை
உயிர் இருக்க வேண்டுமே என்று
நான் பரிதவித்தது
உனக்குத் தெரியாதா அப்பனே?

எல்லாத் தடைகளையும் தாண்டி
உன்னை தரிசித்து அகமகிழ்ந்து,
பிறவிப் பயனை அடைந்தோம் என்று
நினைத்தோமே!

அடைமழையால் பாதி உருகிப் போய்
எங்களுக்குக் காட்சி அளித்தாய் அப்பனே!

அன்று நீ உருகிக் காட்சி அளித்தது,
"மகளே... உன் வாழ்வு பட்டுப்போகப் போகிறதே!" என்று
நினைத்துத்தான் என்பதை நான் அறியவில்லையே ஐயனே!

இன்று அந்த நினைவுகளை
எண்ணி அழுகின்றேனேயன்றி,
உன்னை நிந்திக்க என் சிந்தனை கூட
இடம் தர மறுப்பது ஏனோ?
மீண்டும் உன் திருவடியைத்தான்
பற்றுகிறது என் உள்ளம்!

"நீ குடிகொண்டிருக்கும் எல்லா இடத்திற்கும்
போவோம்" என்று கூறிய என்னவரை,

"வேண்டாம்... நீ என்னிடமே வா!" என்று
அழைத்துக் கொண்டது ஏனய்யா?

உன்னிடம் கேட்க வினாக்கள் ஆயிரம் என்னிடம்!
பதில் கூறாமல் மௌனம் காப்பது ஏன்?
அன்று சந்தோஷத்தைக் கொடுத்த நினைவுகள்,
இன்று நினைத்து வேதனைப்பட வைத்தது ஏனோ?

வலிகள் வரிகளாக...

கவிஞர் சுமதி தசரதன், திருவான்மியூர் (சென்னை)

# அன்பின் ஆளுமை

உயிரினங்கள் எல்லாமே
அன்பை அடிப்படையாகக்
கொண்டே இயங்குகின்றன!

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?"
என்ற குறள் அதனைப்
பறைசாற்றி நிற்கும்!



மனிதர்களை விட மிருகங்கள்
அன்பு காட்டுவதில் சிறந்ததென
வன ஆர்வலர்கள் கூறுவர்!

தங்கள் குட்டியைக் காப்பாற்றவும், ஈன்ற
முட்டைகளைக் காக்கவும் பறவைகளும்
மிருகங்களும் போராடும்!

"ஒற்றுமையாய் வாழ்வதாலே
உண்டு நன்மையே" என்பதை
உணர்ந்துகொண்டவை அவை!

மனித உறவுகளில் பலவிதச்
சிக்கல்கள், உளவியல் நுட்பங்கள்,
யதார்த்தமும் கலந்தே வரும்!

தாயின் அன்பு மட்டும் மாறுவதே
இல்லை என்பதே சிலிர்ப்பை
உண்டாக்கும் மனதில்!

அதிகபட்ச அன்பு என்பதால்தான்
"தாயினும் சாலப் பரிந்து" எனும்
சொற்றொடரே வந்தது!

ஒரு புள்ளியில் ஆரம்பித்துக்
கோடுகளிட்டு அன்னை தனது
அன்பினை வளர்ப்பாள்!

அந்தக் கோட்டைத் தொடர்ந்து
பார்த்தால் மட்டுமே அவளின்
அன்பின் பரிணாமம் தெரியும்!

கவிஞர் கி. சுப்பிரமனியன், அடையாறு

# கோடி



ஒரு கோடி எண்ணங்களில்
உருவான ஆசைகள்!
உருவான ஆசைகளோ
உடன்மறையும் மின்னல்கள்!

ஒரு கோடி மின்னல்களில்
உண்டான வெளிச்சங்கள்!
உண்டான வெளிச்சங்களோ
உடன்அணையும் தீபங்கள்!

ஒரு கோடி நெஞ்சங்களில்
கருவாகும் சொந்தங்கள்!
கருவான சொந்தங்களோ
கருவறுக்கும் தீப்பந்தங்கள்!

ஒரு கோடி களைப்பினில்
தோன்றிய தூக்கங்கள்!
தோன்றிய தூக்கங்களைத்
தோற்கடிக்கும் துக்கங்கள்!

ஒரு கோடி மலர்களில்
மணம் பரப்பும் வாசங்கள்!
மணம் பரப்பும் வாசங்களோ
மறைந்துபோகும் பாசங்கள்!

ஒரு கோடி ஓசைகளில்
ஒலித்திட்ட பாஷைகள்!
ஒலித்திட்ட பாஷைகளோ
ஒழிந்துபோன ஆசைகள்!

ஒரு கோடி சிந்தனைகளில்
பிறந்திட்ட கவிதைகள்!
பிறந்திட்ட கவிதைகளோ
பிரபஞ்சத்தின் கவிவிதைகள்!

கவிஞர் முனைவர் அ. ச. மு. முனியாண்டி, திருவில்லிப்புத்தூர்

# வண்ணத்துப்பூச்சியின் கதை

சிறகு முளைத்து
பறக்கும் தகுதி வந்ததும்,
எல்லையற்ற மகிழ்ச்சியில்
மிதந்தது வண்ணத்துப்பூச்சி!

பூங்காடுகளில் உலவித்
தேனருந்தியும்,
மகரந்தச்சேர்க்கை செய்தும்,
பொழுதைக் கழித்தது.

துணையுடன் வாழ்தலே
இன்பமானதென்று
இறுமாந்திருக்க,
கூற்றுவனாய் வந்த சிறுவன்
துணையைக் கடத்திச் செல்ல,
வாழாவெட்டியானது
வண்ணத்துப்பூச்சி.



வண்ணத்துப்பூச்சியின்
வண்ணங்களை அழித்து,
விதவையென்று பட்டம் சூட்டி,
பறக்க முடியாதபடிச்
சிறகுகளை வலுவிழக்கச் செய்தது
சுற்றம்!

கதவில்லாக் கூட்டுக்குள்
தன்னைச் சிறைப்படுத்தி,
விடுதலை நாளுக்காகக்
காத்திருக்கிறது வண்ணத்துப்பூச்சி!

வண்ணத்துப்பூச்சியின் விடுதலை,
வாழ்விலா? சாவிலா?

கவிஞர் சம்மாந்துறை மஷீனா, இலங்கை

இருபத்தைந்து வருடம்
காலண்டரில் பக்கங்கள் புரண்டதே தவிர
நம் நட்பில் ஒரு நாள் கூட தூசு படியவில்லை

அன்றைக்கு பிரிந்த போது
வகுப்பறை சிரிப்பும்,
கடைசியாக அமர்ந்து பேசிய கதைகளும்,

கடன் வாங்கிய டிபன் பாக்ஸ¬ம்
நேற்று விட்டுட்டு வந்த மாதிரி இருக்கு

இன்று மீண்டும் நினைவோடு
இணைந்தோம்...
முடி நரைச்சிருக்கலாம்
கண்ணுல காலம் கோடு போட்டிருக்கலாம்
ஆனா கட்டிப்பிடிக்கும் போது
அதே பதினாறு வயசு பொண்ணாக
மாறிட்டோம் அல்லவா?



வார்த்தைகள் தடுமாறியது
கண்ணீர் வார்த்தைக்கு முந்திக்கொண்டது.
"எப்படி இருக்க?" னு ஒரே கேள்வில
இருபத்தைந்து வருட கதையும் அடங்கியது.

நட்புனா வயசில்லை
இடைவெளியில்லை
சந்திச்ச மறுநிமிஷமே
மறுபடியும் நாம அதே நாம தான்

வாங்க... ரொம்ப நாள் ஆச்சு
இந்த தடவை பிரியவே கூடாது
ஒன்றாக இணைவோம் கதைப்போம்
உணவை சுவைப்போம் என்று இணைந்தோம்.

எம்மை மீண்டும் சந்திக்க வைத்து சிந்திக்க செய்த
இறைவனுக்கே எல்லா புகழும்

நட்பு என்றும் புனிதமானது
என்றும் தூர நின்றாலும்
நிலைக்க கூடியது

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா, இலங்கை

நேற்று விழுந்த
கண்ணீர்த்துளிகள்,
இன்று நீ
நிமிர வேண்டிய
பாடங்கள்.!

முட்கள் நிறைந்த
பாதையைக் கண்டு,
பயணத்தை ஒருபோதும்
நிறுத்திவிடாதே.!

உளி தாங்கும் கற்கள் யாவும்,
ஒருநாள் சிலையாக மாறும்.
உன் உழைப்பை நீ
நம்பும் வரை..!



கவிஞர் கோ. ஏழுமலை, நத்தாமூர்

அவர்களின் நலனுக்காக
நான் செய்கின்றவை
அவர்களின் பார்வையில்
கெடுதியாகின்றன

ஒன்றிரண்டைக் கூறவில்லை
ஒட்டுமொத்தச் செயல்களையும்
அப்படியே தான்
எடுத்துக்கொள்கிறார்கள்

தவறு என் பக்கமா?
தவறான புரிதல் அவர்கள் பக்கமா?
எதற்கும் ஒரு வரையறை
இருப்பதைப் போல்
கூடவே எண்ணங்களுக்கும்
வார்த்தைகளுக்கும்
இருக்கத்தானே செய்கிறது
பிறகு ஏன் இவ்வளவும்?



கவிஞர் ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை

இதயத்தின் தாகத்தை
அன்பு தணிக்கிறது.

இதயத்தின் தவிப்பை
வார்த்தை தீர்க்கிறது.

இதயத்தின் மொழியை
விழி கண்டுகொள்கிறது.

இதயத்தின் கனத்தை
மௌனம் புரிந்துகொள்கிறது.

இதயத்தை இன்னுமொரு இதயம்
கண்டுகொள்ளும்போதுதான்
இதயமே
உயிர்பெறுகிறது மீண்டுமாய்.



கவிஞர் முபீதா அமீன், அக்கரைப்பற்று

# வானமே எல்லை

சிறகை விரித்துப்
பறந்திடு பெண்ணே!
நெருப்பில் முக்கி எடுத்தாலும்
அடக்கி ஆளும்
ஆளுமை படைத்த ஆண்களின்
வல்லமையின் முன்னே
பீனிக்ஸ் பறவையாகச்
சிலிர்த்து எழ வேண்டும்!.
மலையிலிருந்து விழுந்தாலும்
நீர்வீழ்ச்சியாய் விழ வேண்டும்!
வானத்து நிலவாக
உன்னை உவமைப்படுத்த!
நீயோ விண்வெளியில்
சாதனையின் உச்சத்தில்!
பார்ப்பவர் உன்னை
வியப்புடன் தலைநிமிர்ந்து பார்க்க!
அந்த உயரம் தொட
பெண்ணே உனக்கு
வானமே எல்லை!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை.119

நூல்கள் பேசும் நம்பிக்கையில்,
நாளை நோக்கி நடக்கும் பயணம்.
நீட் எனும் சோதனை வந்தாலும்,
நெஞ்சம் மட்டும் சோர்ந்துவிடாதே.

தோல்வி என்பது முடிவல்ல,
துணிவின் முதல் படியே அது.
கல்வி என்ற ஆயுதம் கையில் இருந்தால்,
காலம்கூட உனக்காகக் காத்திருக்கும்.



மதிப்பெண் மட்டும் வாழ்க்கையல்ல,
மனவலிமையே உண்மையான வெற்றி.
கனவை நம்பி உழைத்திடு,
கண்டிப்பாய் உன் இலக்கு மலரும்.

"கல்வி ஒளி;
துணிவு வழி;
முயற்சி வெற்றி;
மாணவர் நாளைய இந்தியா."

கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# இரவு நதி

சன்னம் சன்னமாய்
உருண்டு புரண்டு சதிராடும்
காற்றின் காதுமடல் கடித்தபடி நகர்கிறது
என் இரவு நதி!

சில இறங்கு பொழுதுகளும்
சில ஏறு பொழுதுகளும்
நீயின்றி எனக்கு இறுக்கமாய்த் தெரிகிறது!

கட்டக்கடைசியில் முடிந்த முடிவாய்
ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தபின்
எளிதாய் வந்து தொற்றிக்கொள்கிறது
நேற்று நீ கொடுக்க மறந்த
எனது அன்புக் கடன்!



அது இருக்கட்டும் எனப் பிடித்து வைக்கவோ
அது போகட்டும் என விட்டு வைக்கவோ
புரியாத மௌனத்தின் சேர்த்தியில்தான்
என் வாழ்வென்னும் கணக்கு வளராமல்
குளிர் சுமந்த வாடைக்காற்றாய்
நீண்டு கிடப்பதை அறியாமலே
நீ புனைய மறந்த சிறுகதைபோல்
அந்த இரவு நதி
இன்னும் இருண்டு கிடக்கிறது!

நதி அறியாத அந்த நாடகத்தில்
நாயகன் நீ என்பதை மறந்தாயோ அன்பே?

வேருக்குத் தெரியாது மரத்தின் மூச்சு
அதுபோல்
உன் விழி அறியாமல் போனதோ
என் இதயத்தின் பேச்சு?

நம் இருவருக்கும் இடையில்
இப்போது இடம் வலம் போகிறது
அந்தப் பொல்லாத இரவு நதி!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# வெற்றியாய் நிலைக்குமே

குறையில்லா மனிதன்தான்
உலகத்தில் இல்லையே.
குறைகளையும் நிறைகளாய்
மாற்றுபவன் புனிதனே!

போராட்டமே வாழ்க்கையாய்
மாறிட்ட காலம்தான்
உண்மையும் நேர்மையும்
வாழ்க்கையில் வேண்டுமே!



புறம் கூறும் மனிதர்களை
புறந்தள்ளியே நடந்திடு
விமர்சனமும் உன்னையே
செதுக்கிடுமே சிலையாய்!

பேராசை ஒழித்திடும்
குணம்தான் வேண்டுமே.
பெருங்கனவை உள்ளத்திலே
விதைத்திடல் வேண்டும்!

தோல்விகள் எத்தனை
எதிர்கொண்டு நின்றாலும்
பயிற்சியும் முயற்சியும்
வெற்றியாய் நிலைக்குமே!

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

# ஓய்வில்லா ஓட்டம்

பண்டைய வாழ்க்கை பகுத்ததே பிரித்து
செண்டை மேளமாய்ச் சிறந்ததே தினமும்
உண்டு களித்தோர் உழைப்பை நம்பியே
நீண்டு வாழ்ந்தனரே நீட்சியுறவாய்

வாழ்வின் மறுபக்கம் வாட்டுதே மாந்தரை
தாழ்வைப் போக்கிட தரணியில் முயற்சியே
கருத்தில் நட்பாகக் களங்கம் போக்கிட
உருவான மலராய் உன்னதம் பெருக்குமே

சிந்திக்கும் வேளையும் சிறிதாகக் குறைந்து
நிந்தனை புரியுதே நிலையில்லாச் செய்யுதே
நட்பின் வட்டமும் நாளுமே குறைந்து
ஊட்டும் வறுமையும் உறுதியாய் நிலைத்ததே

காலை முதலாய்க் காட்சியின் ஓட்டமும்
தொல்லைத் தந்திடும் தொகுத்த வரமாய்
சாதனைகள் புரிந்து சாதித்துக் காட்டவே
சோதனைகள் கடக்க சோர்ந்திடுதே உள்ளமும்



உறவுகள் தினமும் உகந்த சிறப்பாய்
மறக்காமல் நீட்டிக்கும் மகிழ்ந்த மனதாய்
பேசவே முடியாமல் தவிக்கும் எண்ணம்
கூசிடும் மனதால் குறைந்திடும் வார்த்தையே

வெற்றிகள் குவிக்கும் வெளிப்படை உள்ளம்
சுற்றிய வேலியாய் சுகத்தை மறக்குமே
நித்தம் சுழலும் நிம்மதியற்ற மனிதம்
கத்தும் இரவில் கணக்கில்லா வார்த்தையில்

வீட்டில் உள்ளோர் வீட்டிலே பேசாமல்
நாட்டில் உள்ளோர்க்கு நியாயம் பேசுவரே
அடுத்தவர் கதையை அற்புதமாய்ப் பேசியே
தொடுத்த மாலையாய் தொகுப்பாரே சபைதனில்

நிம்மதி குறைந்தது நிலையில்லா வாழ்வில்
சும்மாவே வாழ்வைச் சுகமறந்து நிற்கின்றனரே
வடிவமைத்த கடவுள் வகையாய்ப் பிரித்தார்
துடிப்பான செயலில் துணையான வரமாய்

எளியோர் வாழ்வில் என்றும் விளக்காய்
துளியான நிழலாய்த் துணையாக நிற்பாயே
சங்கடம் போக்கிய சரித்திர நட்பில்
தங்கிடும் உணர்வில் தளிராய்த் துளிர்க்குமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# இதயத்தின் நிழல்

பருவங்கள் தரும்
காலச்சுழற்சியின்
அனுபவங்களை இங்கு
காண நினைக்கிறாயா?
அங்கு மழை
வெயில் காற்று
ஏன் கடும் வறட்சி
இடையிடையே
இளந்தென்றல்
தலைகாட்டும்
தூறலெல்லாம்
அகிம்சையாய்
அசைபோடுகிறது.



ஆனால் இதயத்தின்
நிழலில் அலாதியாய்
அடங்கிக்கொள்கிறது
அலையும் ஆத்மாக்களோடு
ஆத்மார்த்தமாய் சுகம்
விசாரித்துக்கொள்கிறது.

அதன் கனதியான
நிழல் பலருக்கும்
நிம்மதி தருகிறது
நிழல்கள் நிறமாற்றம்
கொள்ளுமானால்
அவதிப்பட்ட ஆன்மாவின்
அலைவினால்
மறைமுகமாய் உடைக்கப்படும்

சகவாசம் தஞ்சமடையும்
தடயங்களைக் கொஞ்சம்
கொஞ்சமாய் அழிக்கக்
கற்றுக்கொள்கிறது....

இதயத்தின் நிழல்
கனதிதான் அங்கு கறுப்புகள்
புள்ளிகளாய்க்கூட
இடம்பிடித்துக்கொள்வதில்லை.

கவிஞர் சேஹ் மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹக்மில்லாவ

# மங்கையும் வேங்கைதான்

தன் வேகத்தால் விலங்கை
வேட்டையாடியது வேங்கை
தன் அறிவால் உலகை
வென்றவள் மங்கை!
பெண்ணடிமை எனும்
களம் எதிர்த்து
மங்கை வீரத்தை
நீ நிறுத்து!
ஆம், மங்கையிலும்
வீரமுண்டு என்பதை
நீ உணர்த்து!
வீர மங்கையே
நீதிக்கோல் ஒன்று
நீ பிடித்து
நேரிய வழியில்
நீ செல்ல
மங்கையும் வேங்கைதான்
நீ கூறு!



கவிஞர் காஜா முகைதீன் பாத்திமா றிம்ஸியா, மூதூர்-01

# இதயங்களின் தூரம்

அருகிலிருந்தாலும்
ஆயிரம் மைல்களுக்கு அப்பால்
அலைபாய்கிறது மனம்!

கைபேசித் திரையில்
கண்மூடித் தூங்குகிறது
கண்ணெதிரே இருக்கும் பாசம்!

வார்த்தைகள் நேர்த்தியாய்
வடிவமைக்கப்படுகின்றன
மனதின் உணர்வுகள் மட்டும்
மரணமடைகின்றன!



அழைப்பேசி எண்கள்
அதிகரித்துக்கொண்டே போகின்றன
அன்போடு அழைக்கத்தான்
ஆட்களைக் காணவில்லை!

முகநூலில்
முகங்கள் முகமன் கூறுகின்றன
அகப்பக்கத்தில் ஆழமாய்
அமர்ந்திருக்க யாருமில்லை!

பக்கத்தில் இருந்தாலும்
பாசத்திற்கு ஏங்கும்
விசித்திரத் தீவாகிப்போனது
இன்றைய மனித இதயம்!

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

# ஓய்வில்லா ஓட்டம்

ஓடுகின்றான் மனிதன்
ஓய்வின்றி ஓடுகின்றான்
உலகை நோக்கியே.

செல்வம் சேர்க்க
செல்வாக்கு பெருக்க
சுகத்தைத் தேடி.

வைகறை வந்தும்
தொழுகை தவறி
வாழ்வை இழக்கிறான்.

குர்ஆனை மூடி
காலத்தை வீணாய்க்
கழித்துச் செல்கிறான்.

நாவிலே பேச்சு
நெஞ்சிலே ஆசை
நற்செயல் குறைவு.

நஃப்ஸின் குரலை
நம்பியே வாழ்ந்து
நாசமடைகிறான்.

கப்ரின் இருளைக்
கண்முன் நிறுத்தி
கருத்தை மாற்று.



மீஸான் காத்துச்
சிறாத் நினைத்துச்
செயலைச் செம்மைப்படுத்து.

தொழுகை பிடித்துத்
தவ்பா அணிந்து
தக்வாவை வளர்த்து.

அல்லாஹ்வின் திருப்தி
அடைந்த வாழ்க்கை
அதுவே வெற்றி.

சுவனம் நோக்கி
ஓடுவோம் இன்றே
ஓய்வது அங்கே.

கவிஞர் நழீல் இப்னு இஸ்மாயில், நமடகஹுவத்த கலேவெல

தன்னவன் பெயர் கேட்டதற்கே
பெண்ணொருத்தி
முகம் முழுக்க
மருதாணி பூசிக்கொண்டாள்.

முந்தானை எடுத்து
முகம் கொஞ்சம் மறைத்து
நீ சிரிக்கையில்,

முத்துக்குளித்து
முத்துக்கள் பலநூறு
எடுக்க ஏங்குதடி
என் இதழ்கள்.

நளினமே நளினமாய்
ஆடுதடி
உன்னிரு கருவிழியில்.



என்ன செய்தாய் பெண்ணே?
உன் அழகைக் கண்ட
என் இமைகள்
இமைக்காமல் நிற்குதே.

படிக்கப் படிக்க
ஆவல் மட்டும்
கூடிக்கொண்டே
போகுதடி எனக்கு.

காற்றில் பேசும்
கலைந்த கூந்தலில்
மதியிழந்தேனடி.

கொல்லாதே பெண்ணே
உன் அழகை
மறைக்க இந்த உலகே
போதாது பெண்ணே.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

இயல்பு
வாழ்க்கையின்
எதார்த்தத்தில்
எல்லாவற்றையும்
மீட்டெடுப்பதற்கு
அவை
காணாமல் போனவை
அல்ல
சில நாமாக
தொலைத்தவை



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# ஆடி வந்தால் தேடி

ஆடி வந்தால் தேடி நம்மைப்
பாடி விதைகளையே நாடி
மாடி வீட்டுத் தோட்டத்தில்
விதைத்து வைத்தாள் ஓடி!

அம்மன் கோவில் திருவிழா
ஊருக்கான பொது விழா
மழை வேண்டி கூழ்வார்த்து
அம்மன் அருள் வேண்டி!

காற்றடிக்கும் தினம் வேகமாய்
காலை மாலை இரவிலும்
தூக்கிச் செல்லும் கூரையைப்
பற்ற வைக்கும் தீயையே!

பழமொழிக்குப் பெயர் போன
ஆடிப்பட்டம் தேடி விதை...
உழவரெல்லாம் மனம் மகிழ்ந்து
விதைகளையே ஆடியில் விதைத்து!

பட்டம் மாறி விதை விதைக்கத்
தவறிடுமே பருவம் ஆண்டில்
சட்டமாக ஆடி வரும் நமக்குச்
சமத்துவமே சரிவருமே!



கவிஞர் முனைவர் இரவி சீனுவாசன், உடுமலைப்பேட்டை

# தீராத தாகம்



வறண்ட நிலம் வெடிப்புகளோடு வான்நோக்கி
வாராதோ மாரியென நீருக்குத் தவமிருக்கும்!
மரங்களின் கிளைகள் காய்ந்து கருகி
கரங்களை உயர்த்தி வருந்தி அழைக்கும்!
நிறமிழந்து காடுகள் வெப்பத்தில் வெந்திடும்!
ஆறுகளும் குளங்களும் நீரின்றி வறண்டிருக்க
வேறு இடம்நாடி பறந்திடும் பறவைகளும்!
சோர்ந்த பறவைகளின் சோக கீதங்கள்!
நீர்தேடி அலையும் விலங்கினக் கூட்டங்கள்!
இரக்கம் கொண்ட வானம் இறக்கியது
மாரியை! நீரின்றி அமையாது உலகென
உரைத்த வள்ளுவத்தின் உண்மையை உணர்ந்தோம்!
இயற்கையைக் காத்தால் இந்நிலை மாறிடுமே!
வனங்களைக் காப்போம்! வளங்களைக் காப்போம்!
நீரினைச் சேமிப்போம்! வீணாக்கல் தவிர்த்திடுவோம்!
நீர்நிலைகள் அனைத்தையும் மாசின்றிக் காத்திடுவோம்!
இவையனைத்தும் தீராத தாகமாய்த் திகழட்டும்
மனிதர்களின் நெஞ்சத்தில்! இயற்கையைக் காத்தால்
தீராத தாகத்தைத் தீர்த்திடுமே இயற்கையும்!
வறண்டபூமி வளமாகும்! நலம் விளையும்!

கவிஞர் ஜ. சீ. சேஷாத்ரி

புரிதலின் சரிதலைச் சந்தித்துப் போகும்
உறவை எண்ணி மின்னி மின்னித் தொடுக்கும்
விண்விண் வலியையும்



வடிகட்டித் தேக்கி என்னதான் லாபமோ
மூச்சிரைத்து வரும் வீரனுக்குத் தாகமெதுவா
இருந்திருக்குமோ

வலிநீரை விழி வழியிலே கசிந்து கசிந்து
நனைந்த கன்னமும் கற்பாறையெனச்
சிதைந்து போய்விடக்கூடுமோ

மசிந்து போகும் கூடிப்போன அவியல் கிழங்கென
வலியிலே நசியும் நெஞ்சினை ஆழப் புதைவெடுத்த
வலியினை வழித்துப் போட வேண்டும்

நெஞ்சமே தேடும் உளறல்களை உறக்கமின்றி
குறுக்கீடுகள் இன்றிச் செவிசாய்த்து
கேட்டல் போதுமெனவே.

புலரும் விடியலும் புனர்நிர்மாணம் செய்திடுமோ.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி

# தவிப்பு



தாய்ப்பறவைக்காய்
பசியுடன்
இருக்கும்
குஞ்சுப்பறவை போலும்

திருவிழாவில்
விரலைக் கைவிட்ட
குழந்தை போலுமொரு
தவிப்பு

நீ
திரும்பி வரும் வரைக்கும்
உள்ளது
சாதாரண சுவாசம் அல்ல
மூச்சுத்திணறல்
கண்மணி

கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

போர்க்களத்தில் புகுந்த
வாள்கள் எல்லாம் உலையில்
உருக்கி எடுக்கப்பட்டவையே!

வார்க்கப்பட்ட இரும்புகள்
வலிகள் தாங்கியவை
போர்க்களம் காணும்
வாளின் முனைகளுக்கு
வேகம் அதிகம்!
வெற்றி மட்டுமே இலக்கு
வென்று காட்டுவோம் நாமினிக்!

பூமி தந்த அழுத்தம்
வைரமாக்க,
வாழ்க்கை தந்த அழுத்தத்தால்
வைராக்கியமாய் இரு!

இரவுகளைத் தின்று தீர்த்தவனுக்கு
விடியலே
வெற்றியின் ஒரு விளக்கு!

கடந்த காலம்
வாழ்க்கையைப் புரட்ட,
நிகழ்காலம்
புத்தகங்களைப் புரட்ட,
எதிர்காலம்
புதையலைப் புரட்ட
தயாராக இருக்கிறது
வாழ்வின் மீதமிருக்கும்
பக்கங்கள்!



காலம் சற்றுத் தள்ளிச் செல்லலாம்,
தோல்விகூடக் கிள்ளிச் செல்லலாம்!

வெற்றியை அள்ளிச் செல்ல
வெண்கொற்றக்குடை காத்திருக்க,
எட்டடியில் இமயம் கிடக்க!

எழுந்து வா!
கடலைக் கடந்து செல்ல
நதியாக விரைந்து வா!

வெற்றி நிச்சயம்!

கவிஞர் சி. முத்தரசன், அரியலூர்

# காகிதத்திற்கு ஒரு பதில்

காகிதமே!
ஏன் என்னை அழவைத்து
வேடிக்கை பார்க்கிறாய்?
உனக்கு இதயமே இல்லையா?

உன்மேனி வெள்ளை என்பதால்,
இதயத்தில் ஈரமே வரவில்லையா?

என்னைப் போன்ற பதுமைகள்
உன்னைப் போன்றவர்களால்தான்
உயிர்த்தெழுகின்றனர்.

அதற்கும் முற்றுப்புள்ளி
வைத்துவிடாதே!

எங்களின் உணர்வுகளைப்
பேனாவின் முனையால்...
உன்னிடமே உதிர்த்துவிடுகிறோம்.

சிலநேரம்,
உனக்குப் பெருமையாகவும்,
புகழாகவும் இருக்கலாம்
என்னைப் போன்றவர்களால்.

சொல்லொணாத் துயரால்
வடித்தேன் என் உள்ளக் குமுறல்களை,
என்னை மறந்துவிடாதே!

அழைப்பு விடுத்திருக்கிறேன்
பதிலைத் தருவாய்.



எனது இனிய காகிதமே!
தூய்மையான உனது இதயத்தைக்
கொஞ்சம் இந்தப் பக்கம் திருப்பு.

நல்லதோர் உரையினைக் கேட்டு
உனது மெல்லிய பண்புபடைத்த
செவிகளைக் கொஞ்சம் திறந்துவிடு.

கவிஞர் அக்பர் ஐனுல் முன்சிலா, மருதமுனை



வலது கையின் பின்புறம்
மறைந்திருக்கும்
அந்தக் காயத்தின் வடு
எப்படி எனக்கு வந்தது என்று
இன்று சரியாக
எனக்கு நினைவில்லை!
ஒன்று மட்டும் தெரியும்
இன்று அம்மாவைக் கேட்டால்கூட
உடனே அந்தக் காயத்திற்கான
விளக்கத்தைச் சொல்வார்கள்!

கவிஞர் இரா. மதிராஜ், காங்கேயம்

# பன்னாங்குழி

வாசிப்பனுபவம்

கவிதைத் தொகுப்பு

நா. மயிலவன்; முதல் பதிப்பு: ஜூன் 2026

பக்கம்: 64; விலை: ₹100; வெளியீடு: ஸ்ரீ சக்தி வெளியீடு, பொள்ளாச்சி




நூலின் தலைப்பே நினைவுகளை நோக்கி நம்மை இழுத்துச் செல்கிறது. பல்லாங்குழி என்ற விளையாட்டை அடிப்படையாகக் கொண்ட நூலின் தலைப்பு ’பன்னாங்குழி’யாகி, பெண்கள் விளையாடும் விளையாட்டாக அன்றைக்குப் பிரபலமாக இருந்த ஒன்று. அக்கம் பக்கத்துப் பெண்கள் ஒன்று கூடிப் பொழுதுபோக்குக்காகவும் தம்மை ஆசுவாசப்படுத்திக்கொள்ளவும் இந்த விளையாட்டின் வழியே நிறைய வாழ்வியலையும் கற்றுக்கொண்ட வரலாறுகள் நாம் அறிந்த ஒன்றுதான். □□□ தலைமுறையில் இது போன்ற வாழ்வியலைக் கற்றுக்கொடுக்கும் விளையாட்டுகள் குறைந்து காணாமல் போகின்றன.

நவீனக் கருவிகளின் படையெடுப்புகள் மனிதர்களை உள்ளங்கைக்குள் உலகத்தைப் பார்க்க உதவி செய்தாலும், வாழ்வியலின் கருத்துகளைக் கற்றுக்கொள்வதில் இன்றைய தலைமுறை பின்தங்கியே நிற்கிறது எனலாம். பல்லாங்குழி விளையாட்டின் தத்துவமே, எப்பொழுதெல்லாம் நமக்குச் சிக்கல்கள் வந்து நமது திறமைகளை கொஞ்சம் கொஞ்சமாக இழக்க வைத்தாலும், இறுதியில் நமது ஆட்டத்தின் திறன் மனதின் திறனை அதிகப்படுத்தி மொத்தமாக வெற்றி வாகை சூட வைக்கிறது என்பதை நமக்குக் கற்றுத் தருகிறது. அந்த வகையில் இந்த நூலின் கவிதைகளும் பழமையும் புதுமையும் கலந்து நினைவுகளின் சுவடுகளில் நம்மையும் கையெழுத்திட வைக்கின்றன.

கவிஞர் இளையவன் சிவா

தனது அனுபவங்களை முழுமையாக உள்வாங்கித் தேர்ந்த சொற்களைக் கொண்டு இந்தக் கவிதைகளைப் படைத்திருக்கும் மயிலவன் அவர்கள், உறவுகளின் பெருமைகளையும் கிராமத்து வாழ்வியலின் அவசியத்தையும் பேரன்பின் சொற்களால் நம்மிடையே இளைப்பாற வைக்கிறார். மனிதன் உடல் உழைப்பில் அதிக நேரம் செலவிட்ட காலம் ஒன்று உண்டு; ஆனால், இன்று தனது வேலையைக் கருவிகளின் கையில் ஒப்படைத்துவிட்டு மூளையை அதிகமாகப் பயன்படுத்தும் சூழலே நிலவுகிறது.

ஒருபுறம் இது மனிதனுக்கு அதிகமான காலச் சேமிப்பைக் கொடுத்தாலும், அதை வைத்துக்கொண்டு அடுத்து அடுத்து அடுத்து என்று ஓடத் தொடங்கும் மனிதனிடம், உறவுகள் மீதான பற்றும் பாசமும் கொஞ்சம் கொஞ்சமாக விரிசலில் காணாமல் போகத் தொடங்குகின்றன. அப்படி ஒரு சூழலில் முதியோர்களைச் சமூகம் பார்க்கும் பார்வையும், குடும்பங்களுக்குள் அவர்கள் நடத்தப்படும் விதமும் கவிஞருக்குள் நிறைய கேள்விகளை எழுப்பிவிடுகின்றன. அவையே நல்ல கவிதைகளாகப் பிரசவமாகியிருக்கின்றன.

நூலில்...

காதலாகக் கசிந்துருகியிருக்கிறார்;

முதுமையின் அவஸ்தையையும் வலியோடு வெளிப்படுத்துகிறார்.

1.

கட்டி அணைத்தாய்
காணாமல் போனது
கடுங்குளிர்
குளிரே
நீ அடிக்கடி
வந்துபோ.




2.
சோறு போட வக்கில்லாதவனெல்லாம்
தெருநாய் என்று திட்டுகிறான்
வயதானால் நீயும்
எங்கள் கூட்டாளிதான்.

3.
நடைவண்டி கொண்டு நடக்கவும்
இரண்டு, நான்கு சக்கர வாகனங்கள் ஓட்டவும்
மரம் ஏறவும்
பழக்கிய எனக்கு
80 வயதில் வாக்கர்
கொண்டு நடக்கப் பழக்குகிறான்.

பண்பாடுகள் வழியே நாகரிகத்தின் அடுத்த கட்டத்தை எட்டிச்செல்லும் மனிதர்கள், தங்கள் வாழ்வியலில் தவறவிட்ட எத்தனையோ நல்ல பண்புகளை நினைவுபடுத்தி அடுத்த தலைமுறைக்கு ஒப்படைக்கும் பொறுப்பையும் இத்தொகுப்பின் வழியே கவிஞர் நிறைவேற்றுகிறார்.

பெரியோரை மதித்தல், விட்டுக்கொடுத்தல், குடும்பத்தில் எல்லோரது பங்களிப்பையும் உணர்ந்துகொள்ளுதல், கருவிகளின் செயல்பாடுகளைப் பயன்படுத்தும் எல்லை, மனித உறவுகளைப் பேணும் விதம், அன்பு, கருணை, இரக்கம் போன்ற மறந்துவிட்ட அறச்சிந்தனைகளை நமக்குள் விதைக்கும் பேரன்பு என நூல் முழுக்க நம்மை இறுகப்பற்றிக் கொள்கின்றன அன்பின் கவிதைகள்!

அத்தியாயம் -3

"இன்னொரு கொலையா?"

(திகில் நவீனம்)

தன்னுடைய சியோலோ காரில் ஏறியதும், செல் போனில் மதன் லாலிடம் தொடர்பு கொண்டு "இந்த ஷில்பா செய்திருக்கிற காரியத்தைப் பார்த்தாயா?" என்று கேட்டார் ராஜன் லால்.

"ஏன் பதற்றப் படுகிறாய்" ?

"நம் திட்டம் அவ்வளவையும் தினேஷிடம் ஷில்பா சொல்லியிருக்கிறாள்."

"என்னது"?

"ஆமாம். வீணாக சுரேஷ் தேவ் கொலையை அவள் பார்த்து விட்டாள் என்ற ஒரே காரணத்திற்காக அவளை இந்தத் திட்டத்தில் பார்ட்னராக சேர்த்துக் கொண்டது நமது தப்பு."

"நீ ஒன்றும் கவலைப் படாதே ராஜன். அவளிடம் ஏன் இப்படிச் செய்தாய் என்று கேட்டாயா?"

"கண்டிப்பாக நான் அப்படி சொல்ல வில்லை என்று சாதிக்கப் போகிறாள்"

"ஓ.கே. நான் குப்தாவை அனுப்பி அவளை முடித்து விடுகிறேன்"

"இன்னொரு கொலையா?"

"பின்னே வேலியிலே ஓடுகிற ஓணானை இடுப்பிலே கட்டிக் கொண்டு அலையச் சொல்கிறாயா? வேறு வழியே இல்லை"

"மேலும் மேலும் பிரச்சினைகள் வராமல் இருந்தால் சரி."

ஷூட்டிங் முடிந்ததும் புவனேஸ்வர் லாட்ஜ் போவதற்காக கார் தயாராக நின்றது.

"சார் உங்களை லாட்ஜில் கொண்டு விடச் சொன்னார்கள் பாஸ்."

என்று பவ்யமாக வந்து சொன்னான் டிரைவர் இந்தியில்.

"ஓ.கே." என்று காரில் ஏறியவன் உள்ளே அமர்ந்திருந்த ஷில்பாவை ஆச்சரியமாய் பார்த்தான்.

"என்னை பார்க்க ஆச்சரியமாக இருக்கிறதா தினேஷ்" ஆங்கிலத்தில் தேன் குழைத்து கேட்டாள்.

"என் மேல் திடீர் ஆர்வம் வரக் காரணம் என்ன ஷில்பா"?

"உன்னை பார்த்த கணமே காதல் கொண்டு விட்டேன் கண்ணாளா"

"போச்சுடா. சரி. நீங்கள் இப்போது எங்கே போகிறீர்கள்?"

"உங்களோடு லாட்ஜிக்கு வந்து கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கலாம் என்று விரும்புகிறேன். உங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லையே"?

அத்தியாயம் -3 "இன்னொரு கொலையா?" (திகில் நவீனம்)

"நோ. நோ. காரைப் புறப்படச் சொல்லுங்கள்."

"டிரைவர் சலோ" என்றவள் "ரெம்பா நெர்வஸா இருக்கிறீர்கள். என்னிடம் பேச தயக்கமா." என்றாள் தினேஷிடம்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் ஊரிலிருந்து கொண்டு வந்த பணம் எல்லாம் தீர்ந்து விட்டது. ராஜன் சாரிடம் அட்வான்ஸ் பணம் வாங்க மறந்து விட்டேன்"

"இதுதானா விஷயம். இந்தாருங்கள். வைத்துக் கொள்ளுங்கள். திருப்பிக் கூடத் தர வேண்டாம்." என்ற வாறு பையிலிருந்து ரூபாய் பத்தாயிரத்துக்கான பணக்கட்டை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

"நான் சம்பளம் வாங்கியது நீங்கள் இதை திரும்பப் பெற்றுக் கொள்வதாக இருந்தால் மட்டும் வாங்கிக் கொள்கிறேன்"

"ஓ.கே." என்றதும் அவன் பணத்தை வாங்கி பையில் வைத்துக் கொண்டு "என்னை அந்த ஜாலி டூர்ஸ் அன்ட் டிராவல்ஸ் அலுவலகத்தில் இறக்கி விடுகிறீர்களா?" என்று கேட்டான்.

"வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுகிறது. நான் உங்களோடு லாட்ஜிக்கு வந்து கொஞ்ச நேரம் பேசி விட்டுப் போகலாம் என்று சொல்லித்தானே கிள்ம்பினேன்"

"ஸாரி எனக்கு கொஞ்சம் வேலையிருக்கிறது. ஒன்று செய்யுங்கள். சாயங்காலம் லாட்ஜிக்கு வாருங்கள். நானும் வேலைகளை முடித்து விட்டு வந்து விடுவேன்."

"நான் காரில் போய் விட்டால் நீங்கள் எப்படி வரப் போகிறீர்கள். மும்பை உங்களுக்கு புது இடம் வேறு."?

"லாட்ஜ் அட்ரஸ் கார்டு என்னிடம் இருக்கிறது. எப்படியாவது டாக்ஸி பிடித்து வந்து விடுகிறேன். ஓ.கே"

காரிலிருந்து தினேஷ் இறங்கியதும் நேராக ஜாலிடூர்ஸ் அன்ட் டிராவல்ஸ் ஆபீஸிற்குள் போய் "மும்பை மெட்ராஸ் பிளைட் ஈ வினிங் எத்தனை மணிக்கு கிளம்புகிறது" என்று கேட்டான்.

அலுவலக கவுண்டரிலிருந்த பெண் "ஈவினிங் நான்கு சர்வீஸ் இருக்கிறது. உங்களுக்கு எப்போது கிள்ம்ப வேண்டும்" ? என்று கேட்டாள்.

கவிஞர் இரஜகை நிலவன்

"நாளை மாலை ஐந்து நாற்பதுக்கு உள்ள ஜெட்ல புக் பண்ணுங்க" என்றான்.

டிக்கட் கைக்கு வந்ததும் "நாளை மறுநாள் காலை மதுரைக்கு எத்தனை மணிக்கு பிளைட் இருக்கிறது" என்று கேட்டான்.

அவள் " பதினொன்று பத்துக்கு" என்றாள்.

" அதிலே சங்கர் என்ற பெயரில் ஒரு டிக்கட் புக் பண்ணுங்கள்" என்று சொல்லி பணத்தை எண்ணிக் கொடுத்து இரண்டு டிக்கட்டுகளையும் வாங்கிக் கொண்டு வெளியே வந்தான்.

வழியில் வந்த டாக்ஸியை நிறுத்தி, ஏறிக்கொண்டு "புவனேஸ்வர் நி யு மும்பை லாட்ஜ் சலோ" என்றான்.

******* **** *****

சாயங்காலம் தூங்கி விழித்து முகத்தைக் கழுவிக்கொண்டு ஆர்டர் கொடுத்து வந்த டீயைக் குடித்துக் கொண்டிருந்த போது காலிங் பெல் "டிங் ...டாங்..." என்றது.

எழுந்து போய் கதவைத் திறந்த போது ராஜன் லால் நின்று கொண்டிருந்தார்.

"கம் இன் சார்"

"தாங்க்யூ " என்றவாறு உள்ளே வந்து அமர்ந்தார்.

"ஸார். நான் நாளைக்கு ஈவினிங் ஊருக்குத் திரும்பி விடலாம் என்று எண்ணியிருக்கிறேன்" என்றான் தினேஷ்.

"என்னாச்சு?"

"கொஞ்சம் உள்ளூர பயம். ஊருக்குப் போக விமான டிக்கட் எடுத்துக் கொண்டு விட்டேன். நீங்கள் இன்று நடித்த விளம்பர படத்திற்கு சம்பளம் கொடுத்தால் கொஞ்சம் உதவியாக இருக்கும்"

"பணம் தருகிறோம். மாஜிஸ்திரேட் காட்சி எல்லாம் நாளைக்கு ஷூட் பண்ணி விடலாம் என்று டைரக்டர் சொன்னாரே"

"ஷூட்டிங் முடிந்த பிறகு ஒரு வாரம் விடுமுறை கொடுத்தால் ஊருக்குப் போய் விட்டு வந்தால் பயம் கொஞ்சம் தெளிந்து விடும் என நினைக்கிறேன்"

அத்தியாயம் -3

"இன்னொரு கொலையா?"

(திகில் நவீனம்)

"அப்படியானால் ஷில்பா சொன்னதை நம்புகிறீர்களா?"
"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை சார்."
"மனதை வீணாக அலட்டிக் கொள்ளாதீர்கள். காரில் வரும் போது அந்தேரியில் இடையிலே இறங்கிக் கொண்டீர்களாமே?"
"ஆமாம். ஷில்பாவிடம் கொஞ்சம் பணம் வாங்கிக் கொண்டு ஒரு டிராவலிங் ஆபீஸில் மும்பை மெட்ராஸ் டிக்கட் புக் பண்ணினேன். நீங்கள் பணம் கொடுத்தால் ஷில்பாவிடம் திருப்பிக் கொடுக்க வசதியாக இருக்கும்."
"........................... "
"என்ன சார் பதில் சொல்லாமல் சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள்"
"ஒன்றுமில்லை. இதைத் தற்போது செலவிற்கு வைத்துக் கொள்ளுங்கள். நாளைக் காலை அலுவலகத்தில் வந்து இந்த விளம்பர பட சம்பளம் பத்தாயிரம் ரூபாயும் புதுப் பட அட்வான்ஸ் பத்தாயிரமும் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று ஆயிரம் ரூபாய் கொடுத்தார் ராஜன் லால்.
"நான் ஊருக்குப் போகிறேன் என்று சொன்னேனே?"
"நாளைக்கு சூட்டிங் முடிந்ததும் தாராளமாக போய் வாருங்கள். நாங்கள் மற்ற நடிகர்களை வைத்து வேறு காட்சிகளை எடுத்துக் கொள்கிறோம்."
"சரி சார்" என்றதும் ராஜன் லால் கைக் குலுக்கிக் கொண்டு கிளம்பினார்."




தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

## கட்டுரை

### பிறப்பு:



சின்னகாஞ்சீபுரத்தில் நடராசன் முதலியார் - பங்காரு அம்மாள் என்பவருக்கு மகனாக சௌமிய ஆண்டு ஆவணித்திங்கள் 31ஆம் நாள் (1909 - செப்டம்பர் 15) பிறந்தார். நடுத்தர குடும்பமொன்றில் பிறந்தார். சென்னை பச்சையப்பன் உயர் நிலைப் பள்ளியிலும், பின்னர் பச்சையப்பன் கல்லூரியிலும் கல்விக் கற்றார்.

### இளமைப் பருவம்:

இளமை காலத்தில் அவர் தந்தை ஒரு கைத்தறி நெசவாளர்;அண்ணாவின் அன்னை பங்காரு அம்மா, அண்ணா சிறு வயதாக இருக்கும்போது இறந்துவிட்டதால், அண்ணாவின் தந்தை நடராசன், இராசாமணி என்பவரை மறுமணம் செய்து கொண்டர். அண்ணாவினை இராசமணி அம்மாள் வளர்த்துவந்தார். அண்ணா மாணவப்பருவத்திலேயே ராணியம்மையாரை மணம்புரிந்தார். இவர்களுக்கு குழந்தை இல்லாததால் தமது தமக்கையின் பேரக்குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்தனர். பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்ட அண்ணாதுரை குடும்ப வறுமைக் காரணமாக பள்ளியிலிருந்து தனது படிப்பை தற்காலிமாக நிறுத்திக்கொண்டு, நகராட்சி அலுவலகத்தில் உதவியாளராக சிறிது காலம் பணிபுரிந்தார்.

### கல்வி:

1934 இல், இளங்கலைமானி மேதகைமை (ஆனர்ஸ்), மற்றும் அதனைத் தொடர்ந்து முதுகலைமானி பொருளியல் மற்றும் அரசியல் பட்டப்படிப்புகளை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்றார். பின்பு பச்சையப்பன் உயர் நிலைப்பள்ளியில் ஆங்கில ஆசிரியராக

கவிஞர் குமர. தர்மசீலன், இதழாசிரியர்

கட்டுரை

**கல்வி:**

1934 இல், இளங்கலைமானி மேதகைமை (ஆனர்ஸ்), மற்றும் அதனைத் தொடர்ந்து முதுகலைமானி பொருளியல் மற்றும் அரசியல் பட்டப்படிப்புகளை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்றார். பின்பு பச்சையப்பன் உயர் நிலைப்பள்ளியில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றினார். ஆசிரியப்பணியை இடைநிறுத்தி பத்திரிகைத்துறையிலும், அரசியலிலும் ஈடுபாடு கொண்டார்.

**இலக்கிய பங்களிப்புகள்:**

அண்ணாதுரை மிகச் சிறந்த தமிழ் சொற்பொழிவாளரும், மேடைப் பேச்சாளரும் ஆவார். தமிழில் சிலேடையாக, அடுக்கு மொழிகளுடன், மிக நாகரிகமான முறையில், அனைவரையும் கவர்கின்ற வகையில் தனிக்குரல் (கரகரத்த குரலில்) வளத்துடன் பேசும் திறன் பெற்றவர். எழுத்தாற்றலும் பெற்றவர்

பல புதினங்களும், சிறு கதைகளும் மற்றும் அரசியல் நாடகங்களுக்கும் நாடகமாக்கம், திரைக்கதைகள் எழுதியவர். அவரே கதாபாத்திரமேற்று நாடகங்களில், திராவிடர் கழக பிரச்சார நாடகங்களில் நடித்துள்ளார்.

திரைப்படங்களை முக்கிய பிரச்சார ஊடகங்கங்களாக அரசியலுக்காக பயன்படுத்தியவர் அண்ணாதுரை. இவரின் முதல் திரைப்படம் நல்லதம்பி (1948). இதில் முக்கிய கதாபாத்திரத்தில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நடித்துள்ளார். இது ஜமீன்தாரி ஒழிப்புமுறையை வலியுறுத்தி எடுக்கப்பட்டத் திரைப்படமாகும். இவரின் வேலைக்காரி (1949), ஓர் இரவு ஆகிய நாடகங்களும் தாய் மகளுக்குக் கட்டிய தாலி, ரங்கோன் ராதா, வண்டிக்காரன் மகன் ஆகிய கதைகளும் திரைப்படமாக எடுக்கப்பட்டன. திராவிட அரசியலின் பிரச்சாரமாக இத்திரைப்படங்கள் திகழ்ந்தன.

கவிஞர் குமர. தர்மசீலன், இதழாசிரியர்

வேலைக்காரியில் அண்ணாதுரை அடக்குமுறையை கையாளும் நிலச்சுவான்தாரர்கள் ஜவஹர்லால் நேரு மற்றும் காந்தியுடன் எப்படி கூட்டணி வைத்துள்ளார்கள் என்பதை விளக்குகின்ற விதமாக எடுத்துக்காட்டப்பட்டது.

இவரின் திரைப்படங்கள் பெரும்பாலும் பிராமண எதிர்ப்பு மற்றும் காங்கிரஸ் எதிர்ப்பு பிரச்சாரங்களாக விளங்கின. இப்பிரச்சாரங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் நாடகமேடை கலைஞர்கள் மற்றும் திரைக்கலைஞர்களாக அண்ணாதுரைக்கு பக்கபலமாக விளங்கியவர்கள், டி.வி. நாராயணசாமி, கே. ஆர். ராமசாமி, என்.எஸ்.கிருஷ்ணன், எஸ். எஸ். ராஜேந்திரன், சிவாஜி கணேசன், மற்றும் எம்.ஜி.ராமச்சந்திரன்.


அண்ணாதுரை துணைவியாரோடு

அண்ணாவின் சில நூல்கள் மிகுந்த சர்ச்சைகளை உருவாக்கியவை. அவற்றில் ஆரிய மாயை (ஆரியர்களின் போலித்தோற்றம்) பிராமணர்களை கடுமையாகச் சாடியதாக விமர்சிக்கப்பட்டது. ஆரிய இனச்சேர்க்கை, திரைமறைவுகளை உருவகப்படுத்தும் விதமாக எழுதபட்டிருப்பதாக விமர்சனம் வைக்கப்பட்டது. இந்த நூலுக்காகவும், கிளர்ச்சி செய்கின்ற நூல் என்ற காரணத்திற்காகவும் அவருக்கு ரூபாய் 700 அபராதமும் (தண்டம்), சிறைத்தண்டனையும் அளிக்கப்பட்டது. காதல் ஜோதி, சந்திர மோகன் (சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்), கம்பரசம், தீ பரவட்டும்! பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். பெரும்பாலான நூல்கள் இன்றும் அச்சில் கிடைக்கின்றன.

**படைப்பு:**

- அதிர்ச்சிக்கு வைத்தியம்
- அறப்போர்
- இலட்சிய வரலாறு
- கம்பரசம்
- காதல்ஜோதி நாடகம்
- பணத்தோட்டம்பணத்தோட்டம்
- தாழ்ந்த தமிழகம்
- நிலையும் நினைப்பும்
- வர்ணாஸ்ரமம்
- 1858-1948
- அவர்கள் சந்திப்பு
- ஆரியமாயை
- உலகப்பெரியார்
- கற்பனைச்சித்திரம்
- குமரிக்கோட்டம்
- மே தினம்
- தீ பரவட்டும்
- ரோமாபுரி ராணிகள்
- ஜமீன் இனாம் ஒழி்ப்பு

**அண்ணாவைப்பற்றிய நூல்கள்:**

அண்ணாதுரை (தொகுப்பு நூல்), 1952, கலைமன்றம், சென்னை
அண்ணாதுரை, பி.வி.ராமசாமி, 1952, கருணாநிதி பதிப்பகம், சென்னை-2

**இறப்பு:**

அண்ணாதுரை முதலமைச்சரான இரண்டு வருடத்திற்குள் புற்று நோய் தாக்குதலுக்குள்ளாகி, மருத்துவ பராமரிப்பிலிருக்கும் பொழுது 3 பெப்ரவரி, 1969 அன்று மரணமடைந்தார். அவர் புகையிலையை உட்கொள்ளும் பழக்கமுடையவராததால் (புகையிலைப் பொடி நுகரும் பழக்கம்) இந்நோய் தீவிரமடைந்து மரணமடைந்தார். அவரின் இறுதி மரியாதையில் பெருந்திரளான மக்கள் கலந்துக் கொண்டனர். இந்நிகழ்வு கின்னஸ் உலக புத்தகத்தில். இடம் பெற்றுள்ளது. இறுதி மரியாதையில் சுமார் 1 கோடியே 50 இலட்சம் பேர்கலந்துக் கொண்டு இறுதி மரியாதைச் செலுத்தினர். இவரின் உடல் சென்னை மெரீனா கடற்கரையில் அடக்கம் செய்யப்பட்டது.

கவிஞர் குமர. தர்மசீலன், இதழாசிரியர்

நாளை

# நமதே

முயற்சி உடையவனுக்கு

எட்டு திசையும்

ஏற்ற திசைதான்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



## அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com